# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## மாதாந்தப் பரீட்சை (01) -2022 (யூலை)
## Monthly Examination (01) – 2022 (July)

| | | |
|---|---|---|
| தரம் :- 11<br>Grade :- 11 | புவியியல் I,II<br>Geography I,II | நேரம் :- 2 மணித்தியாலம்<br>Time :- Two hours |

## புவியியல் I

- இவ் வினாத்தாள் **20** வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா** வினாக் களுக்கும் **இவ் வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

❖ **01**தொடக்கம் **05** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்துப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) சுற்றாடலில் உள்ள இயற்கை வளங்களுள் ஒன்றான............................ மனித முயற்சி இன்றிப் பெறப்படுகின்ற வளங்களாகும். (கனியவளங்கள், குழாய்நீர், காடுகள்)
2) புராதன வழிபாட்டிடங்களை அமைப்பதற்கு ......................... பாறைகள் உள்ள இடங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. (வைரம், பளிங்குப்பட்டை, தொாலமைற்)
3) சர்வதேச சமுத்திரச் சட்டத்தின்படி இலங்கையின் கரையிலிருந்து 12 கடல்மைல் வரை அமைந்துள்ள கடற் பிரதேசம்................................................... என அழைக்கப்படுகின்றது. ( ஆட்புலக்கடல் எல்லை, வெளிப்புற வலயம், தனித்துவமான பொருளாதார வலயம்)
4) இலங்கையில் கேகாலை மாவட்டத்தில் ................................. எனும் பிரதேசத்தில் காரியச் சுரங்கம் அமைந்துள்ளது. (கஹட்டக,போகல,கொலன்ஹக)
5) உலகில் வனத்தொகைப் பருமனில் முதன் நிலையிலுள்ள முதல் பத்து நாடுகளில் அதிகளவு நாடுகள் ......................... கண்டத்திற்கு உரித்தானவையாகும். (ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியா)

❖ 06 தொடக்கம் 10 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் **'ச'** யையும் பிழையாயின் **'பி'** யையும் **சுற்றி வட்டம் வரைக.**

6) இரும்புத்தாதுப்படிவு காணப்படும் சிரோடி பெஸ்கோ பிரதேசம் பேரு நாட்டில் அமைந்துள்ளது. ச / பி
7) கடகக் கோட்டிற்கும் , மகரக் கோட்டிற்கும் இடையே அயனமண்டல மழைக்காடுகள் பரந்துள்ளது. ச / பி
8) இலங்கையின் ஈரவலயத்தில் அதிகளவில் பரந்து காணப்படுவது செங்கபில மண்ணாகும். ச / பி
9) இலங்கையில் பரந்தளவான தரைக்கீழ் நீரின் இருப்பு காணப்படுவது புத்தளத்திலுள்ள வனாத்துவில்லு மற்றும் மன்னாரிலுள்ள முருங்கன் தாழியும் ஆகும். ச / பி
10) இலங்கையின் பௌதிகச் சூழலானது சூழலை மாசுபடுத்தாத நீர்மின் சக்தி, சூரியசக்தி, கடலலைச்சக்தி, காற்று சக்தியைப் பெறக்கூடியதாக இருந்தும் இன்றும் பெற்றோலிய இறக்குமதியில் தங்கி உள்ளது. ச / பி



kalvi.lk

❖ **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்களில் உள்ள **வெற்றிடங்களை பொருத்தமான** சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.

11) தாவரங்களிலுள்ள நீரானது ........................... மூலம் வளிமண்டலத்தில் சேர்கின்றது.

12) உலகில் உயர்தரமான காரியத்தை ......................... என்ற நாடு உற்பத்தி செய்கின்றது.

13) இலங்கையிலுள்ள ரந்தெம்பெ நீர்த்தேக்கமானது ......................... நதியை மறித்து அமைக்கப்பட்டுள்ளது.

14) அயன மண்டல மழைக்காட்டிற்கும், உலர்கலப்பு என்றும் பசுமையான காட்டிற்கும் இடையே அமைந்திருப்பது ............................ காடு ஆகும்.

15) 1950 ஆம் ஆண்டின் பின்னர் ........................... நாடுகளின் சனத்தொகை துரிதமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

❖ 16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

16) ஊசியிலைக் காட்டின் சிறப்பியல்புகளுள் ஒன்று.

1.மரங்கள் பெருமளவு கூம்பு வடிவமானவை
2.அகன்ற இலைகளை உடைய வைரம் செறிந்த மரங்கள்
3.குளிர் பருவத்தில் மரங்களின் இலைகள் உதிர்ந்து விடும்
4.உயிர்ப்பல்வகைமை அதிகம் காணப்படுகின்றது.

(..........)

17) இலங்கையில் அமைந்துள்ள வன ஒதுக்காக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

1.சிங்கராஜவனம் 2.கன்னெலிய 3.நாகியாதெனிய 4.ஹக்கல

(..........)

18) இலங்கையில் அமைந்துள்ள வெப்ப மின்சக்தி நிலையங்களுள் ஒன்று.

1.உக்குவல 2.புத்தளம் 3.நுரைச்சோலை 4.கொத்மலை

(..........)

19) உலகில் இரண்டாம் நிலைச் சனத்தொகை மையங்களுள் அமைந்துள்ள நகரம்.

1.பீஜிங் 2.கொல்கத்தா 3.லண்டன் 4றியோடி ஜெனிரோ.

(..........)

20) இலங்கையில் அதிகளவில் காணப்படும் கனியவளவகை.

1.பெற்றோலியம் 2.உலோகம் 3.நிலக்கரி 4. உலோகம் அல்லாதவை

(..........)

(20X1.5=30 புள்ளிகள்)

## புவியியல் – II

➢ **முதலாம் வினா உட்பட எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) **(அ)** உமக்குத் தரப்பட்டுள்ள **1:50,000** இடவிளக்கப் படத்தின் பகுதியைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

❖ (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) இலக்கம் 1 இனால் காட்டப்படுவது யாது? (2 புள்ளிகள்)



kalvi.lk

(தென்னை, இறப்பர், பிறபயிர்)

(ii) இலக்கம் 2 இனால் காட்டப்படுவது யாது? (2 புள்ளிகள்)

(புகையிரதநிலையம், புகையிரதத்தரிப்பு, அகன்ற ஒற்றைப் புகையிரதப்பாதை)

(iii) இலக்கம் 3 இனால் காட்டப்பட்ட பௌதிக அம்சம் எது.? (2 புள்ளிகள்)

(கணவாய், சுவடு, பள்ளத்தாக்கு)

(iv) இலக்கம் 4 இனால் காட்டப்படுவது யாது?. (2 புள்ளிகள்)

(பாடசாலை, தபாற்கந்தோர், நீதிமன்றம்)

❖ (v) தொடக்கம் (vii) வரையுள்ள வினாக்களுக்குரிய விடையை சரியாக எழுதுக.

(v) பிரதான ஆற்றின் மத்தியில் குறித்துக் காட்டப்பட்ட நிர்வாக எல்லை எது? (2 புள்ளிகள்)

(vi) வடகிழக்கு காற்பகுதியில் அமைந்துள்ள யாகம சிகரத்தின் உயரம் எவ்வளவு?(2 புள்ளிகள்)

(vii) F என்ற நாற்பக்கலின் பரப்பளவு எத்தனை சதுரகிலோமீற்றர்களாகும்? (2 புள்ளிகள்)

❖ படப்பகுதி பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து அவை சரியாயின் ''ச'' எனவும் பிழையாயின் ''பி'' எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்துக்கு எதிரே எழுதுக.

(viii) இப்படப் பிரதேசத்தில் அதிகளவில் பயிரிடப்பட்டு இருப்பது தென்னை ஆகும்(2 புள்ளிகள்)

(ix) இப்படப் பிரதேசத்தில் புகையிரதப்பாதைக்கும், ஆற்றிற்கும் இடையே அமைந்திருப்பது அதிவேக நெடுஞ்சாலை ஆகும். (2 புள்ளிகள்)

(x) இப்படப் பிரதேசம் இரண்டு மாகாணங்களை உள்ளடக்கி உள்ளது. (2 புள்ளிகள்)

Education கல்வி அமைப்பு

**(ஆ)** உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு உலகப் படத்தின் அருகே அமைந்துள்ள நிரலைப் பயன்படுத்துக.

❖ (I) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உலகப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை உலகப்படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| (i) | ஹமேசல் | W,X,Y | |
| (ii) | அமேசன் பள்ளத்தாக்கு | N,O,P | |
| (iii) | யூரல்மலை | R,S,T | |
| (iv) | டோக்கியோ நகரம் | K,L,M | |
| (v) | நைஜீரியா | B,C,D | (5X1=5புள்ளிகள்) |

**(இ)** உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் படத்துக்கு அருகிலுள்ள நிரலைப் பயன்படுத்துக.

❖ (i) தொடக்கம்(v)வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான



kalvi.lk

விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை இலங்கைப்படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

(i) புல்மோட்டை G,H,J

(ii) வில்பத்து சரணாலயம் A,B,C

(iii) விக்டோறியா நீர்மின் நிலையம் D,E,F

(iv) அம்பாறை மாவட்டம் O,P,R

(v) காங்கேசன்துறைத்துறைமுகம் K,L,M (5X1=5புள்ளிகள்)

2)

(i) தீப்பாறைகளின் இரு வகைகளையும் தருக. (4புள்ளிகள்)

(ii) மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்று தருக. (6புள்ளிகள்)

(iii) (a) மண்ணின் பக்கப்பார்வையை வரைந்து அதன் பகுதிகளைப் பெயரிடுக? (6புள்ளிகள்)

(b) நீர் பெயரிட்ட பகுதிகள் இரண்டின் சிறப்பியல்புகளை விளக்குக.? (4புள்ளிகள்)

3)

(i) இலங்கையிலுள்ள உலோகக் கனியங்கள் இரண்டு தருக. (4புள்ளிகள்)

(ii) கனிய மணலில் ஒன்றான சிலிக்காவின் பயன்பாடு மூன்று தருக. (6புள்ளிகள்)

(iii) (a) வலு சக்திப் பயன்பாட்டில் எழும் பிரச்சினைகள் மூன்று தருக. (6புள்ளிகள்)

(b) வலுசக்தி வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (4புள்ளிகள்)

4)

(i) உலக சனத்தொகையின் இரண்டு வளர்ச்சிக்கால கட்டங்களையும் தருக (4புள்ளிகள்)

(ii) உலக சனத்தொகை செறிவாக வாழும் வலயங்களுள் மூன்றினைத் தருக. (6புள்ளிகள்)


(iii) (a) சனத்தொகையின் பரம்பல்மீது செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக்காரணிகள் மூன்று தருக.? (6புள்ளிகள்)

(b) சனத்தொகையின் பரம்பல்மீது செல்வாக்குச் செலுத்தும் மானிடக்காரணிகள் ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (4புள்ளிகள்)



kalvi.lk

வினா 1 (அ)





SCALE : 1 : 50,000



kalvi.lk

வினா 1 (ஆ)




(i)

(ii)


(iii)

(iv)

(v)

5

வினா 1 (இ)




(i)

(ii)

(iii)

(iv)

(v)

5



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page